**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 35 / 2020** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 4<br><br>Defense<br>Court |
| Name | நாகு |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2026. | |

எதிரி - ஆஜர்

அரசு தரப்பில் வழக்கறிஞர் - ஆஜர் இல்லை.

முதல் விசாரணை

நான் தற்பொழுது ராக்கம்பட்டியில் குடியிருந்து, தோட்ட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது மருமகன். அ.சா.1- எனது மகள். சுமார் 10 வருடத்திற்கு முன்னர் அ.சா.1 வீட்டில் பகல் 12.00 மணியளவில் தீ எறிந்தது. யார் தீ வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தாகவும், போலீசார் விசாரணையில் அ.சா.1-ற்கும், எதிரிக்கும் 10 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் ஆனது என்றும், எதிரியானவர் அடிக்கடி மது அருந்திவிட்டு வந்து தகராறு செய்ததாகவும், அதனால் அ.சா.1-யும், அவரது கணவரும் கடந்த 8 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்றும், கடந்த 22.08.2016ம் தேதி பகல் 12.00 மணியளவில் எதிரியானவர் அ.சா.1-யின் வீட்டிற்கு வந்து அ.சா.1-ஐ பார்த்து அவருடன் சேர்ந்து வாழ அழைத்தாகவும், அதற்கு அ.சா.1 மறுத்தால் எதிரி அ.சா.1 ஐ ஆபாசமாக பேசியதாகவும், அ.சா.1-ஐ பார்த்து எவனடி வைத்திருக்க என்று சொல்லி அ.சா.1-யும், சாட்சி யுவராணி மற்றும் கமலா ஆகியோர்கள் மூவரையும் பார்த்து உங்களுக்கு வீடு இருந்தால் தானே வாழ முடியும் என்றும், வீட்டை கொழுத்தி விடுவேன் என்று சொல்லி மண்ணெண்னை கேனை எடுத்து வீட்டில் மண்ணெண்னை ஊற்றி தீ வைத்தாகவும், அதனால் அ.சா.1-யின் வீடானது சுமார் 10,000/- மதிப்பில் சேதம் ஏற்பட்டதாகவும், பின்னர் எங்களை பார்த்து எதிரி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரி எனது மருமகன் என்பதாலும், எதிரியும், அ.சா.1-யும் சமாதானமாக போய்விட்டதாலும் எதிரியை காப்பாற்றவேண்டும் என்பதற்காக சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN Date: 2026.07.21 15:34:31 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.